2. தகவல் கோரல்

(அ) தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனை இந்தியாவிற்குக் கொண்டு வந்து விசாரணை செய்வது.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடுகள்).

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவி 1991 ஆம் ஆண்டு எங்களுடைய இளைய தலைவன் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டு, அதிலே முக்கியக் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு, நீதிமன்றத்திலே வழக்கு ஏற்கெனவே split செய்து N.B.W. எல்.டி.டி.ஈ. தலைவர் பிராபாகரன் மீது பெண்டிங்கிலே இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழகத்திலே, நீதிமன்றத்திலே, இதுவரை ஒளிவு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த- he was absconding actually - கடந்த 10 ஆண்டுகளாக தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருந்த பிரபாகரன் அவர்கள் நேற்று சர்வதேச பத்திரிகையாளர்களை எல்லாம் சந்தித்து, இலங்கை கிளிநொச்சியிலே அவர்கள் வெளிப்படையாக வந்து பத்திரிகைக்கு பேட்டி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே நம்முடைய தமிழகத்தில் நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய N.B.W.-வை நிறைவேற்றி அவர்கள் மீது இருக்கக்கூடிய வழக்கை நடத்தி முடிப்பதற்காக தமிழக அரசு, மத்திய அரசை வலியுறுத்தி Interpol மூலமாக அந்த பிரபாகரனை தமிழகத்தில் இருக்கக்கூடிய நீதிமன்றத்திற்குக் கொண்டு வருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அரசுத் தரப்பிலே என்ன என்று கேட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி, சொல்லுங்கள் என்ன என்று.

(ஆ) சென்னை, பெசன்ட் நகர், பாரத ஸ்டேட் வங்கியில் நடைபெற்ற கொள்ளை.

***திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று பெசன்ட் நகரின் பேங்கிலேயிருந்து கொள்ளை அடிக்கப்பட்டு இருக்கிறது...

2002 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாம் கொடுத்திருக்கிறீர்கள். கவன ஈர்ப்பு இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சி பீட பேரவைக்கு (குறுக்கீடுகள்) இன்றைக்குக் கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்படவில்லை. நாளைக்கு எடுத்துக்கொள்வதாக இருந்தால் நான் சொல்கிறேன். (குறுக்கீடு)

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினைக்கான முன்னறிவிப்பு

டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று ஓர் உரிமைப் பிரச்சினை கொடுத்திருந்தேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பொன்முடி, கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் இருக்கிறது. விளக்கத்திற்குள்ளே போக வேண்டாம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சி மன்றப் பேரவைக்கு 3 சட்டமன்ற உறுப்பினர்களையும், சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு உறுப்பினர்களையும்............ (குறுக்கீடுகள்) ஆய்வில் இருக்கிறது என்று சொல்லி விட்டேன். அதற்கு மேல் என்ன? (குறுக்கீடு) அதுதான் சொன்னீர்கள், ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

(ஈ) 9-4-2002 ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்பு நூலகத்தில் இல்லாதது

டாக்டர் க. பொன்முடி: இன்று காலை நான் நூலகத்திற்குச் சென்றேன். நூலகத்திற்குச் செல்கிறபோது முதல் நாள் பூராவும் அங்கே இருப்பது வழக்கம். நேற்றைக்கு முதல்நாள் 9-ஆம் தேதி Proceedings-ஐ நூலகத்தில் கேட்டால் இதுவரை இல்லை என்று சொல்கிறார்கள். அவற்றைத் திருத்துவதற்காக எடுத்துச் சென்று விட்டார்களா, ஏன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்தான் அதை விசாரித்துச் சொல்ல வேண்டும். 9 ஆம் தேதி நடந்த (Proceedings) இப்போது கிடைக்கவில்லை நூலகத்தில்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியிருந்தால் விசாரிக்கிறேன்.